# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் செவ்வாய்க்கிழமை நாள் 28.06.2022 காலை 11.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி காமராஜ் மன்றம் ஏ.எஸ்.ஜி. லூர்துசாமி கூட்ட மண்டபத்தில் பின்வரும் பொருள்களைப் பற்றி சாதாரணக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

**பொருள்:1**

தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) 2021–2022, திட்டத்தின் கீழ், தனிநபர் கழிப்பிடம், புதிதாக சமுதாய கழிப்பிடம் , நவீன கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் எண். 5990/2022/SBM –நாள். 11.04.2022ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதன்அடிப்படையில் இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள புதிதாக சமுதாய கழிப்பிடம் மற்றும் நவீன கழிப்பிடங்களை கட்டும் பணிகளுக்கு பின்வருமாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு. **Community Toilet – Rs.1.5 lakh / per seat, Urinal – Rs.32000/ Per Seat)Public Toilet – Rs. 2.50 lakhs / Seat.**

| வ. எண் | திட்டப்பணி விபரம் | மதிப்பீடு (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| | **சமுதாய கழிப்பிடங்கள் (2021 –2022)** | |
| 1 | வார்டு எண் .31க்குட்பட்ட கல்பாளையம் பகுதியில் பழுதடைந்துள்ள கழிப்பிடத்தை இடித்து விட்டு புதிய சமுதாயக்கழிப்பிடம் கட்டும் பணி (16 எண்ணிக்கை ) | 24.00 |
| 2 | வார்டு எண் .17க்குட்பட்ட வடக்கு தாரா நல்லூர் பகுதியில் சமுதாயக்கழிப்பிடம் கட்டும் பணி (10 எண்ணிக்கை ) | 15.00 |
| 3 | வார்டு எண் .54க்குட்பட்ட ஆதி திராவிடர் தெருவில் அமைந்துள்ள பழைய கழிப்பிடத்தை இடித்துவிட்டு புதிய சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (10 எண்ணிக்கை) | 15.00 |
| 4 | வார்டு எண் .56க்குட்பட்ட சமத்துவபுரம் பகுதியில் புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (10 எண்ணிக்கை ) | 15.00 |
| 5 | வார்டு எண் .08க்குட்பட்ட எடமலைப்பட்டி புதுரர் முத்து மாரியம்மன்கோயில் பகுதியில் பழுதடைந்துள்ள கழிப்பிடத்தை இடித்துவிட்டு புதிய சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி ( 08 எண்ணிக்கை ) | 12.00 |
| 6 | வார்டு எண் . 57க்குட்பட்டட கொல்லாங்குளம் பகுதியில் பழுதடைந்துள்ள கழிப்பிடத்தை இடித்துவிட்டு புதிய சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (6 எண்ணிக்கை) | 9.00 |
| 7 | வார்டு எண் .30க்குட்பட்ட லாரிசெட் வளாகத்தில் உள்ள கழிப்பிடத்தை இடித்து விட்டு புதிய சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி ( 04 எண்ணிக்கை) | 6.00 |
| | **மொத்தம்** | **96.00** |
| | **சிறுநீர் கழிப்பிடங்கள் (2021 –2022)** | |
| 1 | வார்டு எண் .18க்குட்பட்டட பீரங்கிகுளம் பகுதியில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி (3 எண்ணிக்கை) | **0.96** |
| 2 | வார்டு எண் .20க்குட்பட்டட மேலப்புலிவார்டு சாலை குறுக்கு பகுதியில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி (3 எண்ணிக்கை) | **0.96** |
| 3 | வார்டு எண் .30க்குட்பட்டட எடத்தெரு பகுதியில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி (3 எண்ணிக்கை) | **0.96** |
| 4 | வார்டு எண்.30 க்குட்பட்டட சிறைச்சாலை சாலை (SubJail Road) பகுதியில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி (3 எண்ணிக்கை) | **0.96** |
| | **மொத்தம்** | **3.84** |

| | | |
|---|---|---|
| **பொது கழிப்பிடங்கள் (2021 –2022)** | | |
| 1 | வார்டு எண்.25க்குட்பட்ட லாவன்யா கார்டன் பகுதியில் புதிதாக பொதுக்கழிப்பிடம் கட்டும் பணி (14 எண்ணிக்கை ) | 35.00 |
| 2 | வார்டு எண்.25க்குட்பட்ட வ.உ.சி தெருவில் புதிததாக பொதுக்கழிப்பிடம் கட்டும் பணி (14 எண்ணிக்கை ) | 35.00 |
| | **மொத்தம்** | **70.00** |
| | **சிறுநீர் கழிப்பிடங்கள் (2021–2022)** | |
| 1 | வார்டு எண்.26க்குட்பட்ட உய்யகொண்டான் கரை வண்ணாரப் பேட்டை அருகில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி (4 எண்ணிக்கை ) | **1.28** |
| 2 | வார்டு எண்.26க்குட்பட்ட உய்யகொண்டான் கரை கல்லாங்காடு அருகில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணி (4 எண்ணிக்கை ) | **1.28** |
| | **மொத்தம்** | **2.56** |

மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

## <u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மேற்கண்ட பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு SBM 2.0 திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட திட்டப் பணிகளுக்கான தொகையினை தூய்மை இந்தியா திட்டம் SBM 2.0 திட்ட நிதியின் கீழ் வழங்க அனுமதி அளிக்கலாம்.
3. திட்ட பணிகளின் அவசர அவசிய கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதற்கு அனுமதி வழங்கலாம்.

**இ7/7340 /2022 (மையம்)**

தீர்மானம்: 70 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள்:2**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மாநகர் பகுதிகளுக்குள் நாளுக்கு நாள் போக்குவரத்து நெரிசல் அதிகமாகி வருவதால், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் நோக்கில், பஞ்சப்பூர் முதல் கரூர் புறவழிச்சாலை வரையிலான உய்யகொண்டான் கால்வாய் கிழக்கு கரையில் கீழ்கண்ட விபரப்படி தார் சாலை அமைப்பது அவசியமாகிறது.

| வ. எண். | வார்டு எண். | வேலையின் விபரம் | நீளம் (மீ) | அகலம் (30 அடி) (மீ) | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|---|
| 1. | 62 | கோரையாற்று கரையில் (வடக்கு கரை) டோபி காலனி மதுரை புறவழி சாலை முதல் கிருஷ்ணாபுரம் வரை மைய சுடுகலவை இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணி. | 850 | 9.15 | 260.00 |
| 2. | 57 | கோரையாற்று கரையில் கிருஷ்ணாபுரம் முதல் திண்டுக்கல் சாலை வரை மைய சுடுகலவை இயந்திரம் மூலம் தார் சாலை அமைக்கும் பணி. | 2500 | 9.15 | 760.00 |
| 3. | 8, 25, 26, 55, 10, 11 | கோரையாற்று கரை திண்டுக்கல் சாலை முதல் உறையூர் சோழம்பாறை வழி கரூர் புறவழிச்சாலை (கோணக்கரை) வரை தாங்கு சுவர் அமைத்து பேவர் இயந்திரம் மூலம் தார் தளம் அமைக்கும் பணி. | 9000 | 9.15 | 3000.00 |
| | | **மொத்தம்** | **12350** | | **4020** |

பொதுப்பணித்துறை ஆற்றுப்பாதுகாப்பு கோட்டம் அலுவலகத்திடம் தடையின்மை சான்று பெற்று மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கும்,

இப்பணிகளுக்கான நிர்வாக அனுமதி மற் றும் உரிய நிதியினை அரசின் உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியிலிருந்து வழங்க கோரி, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் வழியாக நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கும் கருத்துரு அனுப்பி வைப்பதற்கும், மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கான நிர்வாக அனுமதி மற்றும் உரிய நிதியினை அரசின் உட்கட்டமைப்பு மற்றும் வசதி நிதி யிலிருந்து வழங்க கோரி, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள் வாயிலாக நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கும் கருத்துரு அனுப்பி வைக்கலாம்.

**இ1/7964/2022(மையம்)**

தீர்மானம்: 71 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள்:3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, இரண்டாவது வார்டு குழு அலுவலகம் புதிய வார்டு எண்.47 (பழைய வார்டு எண்.35)க்குட்பட்ட கொட்டப்பட்டு வெங்கடேஸ்வரா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் இல்லாததால், மழைக்காலங்களில் மழைநீர் செல்லவழியின்றி ஜே.கே நகர் பகுதி குடியிருப்பு பகுதிக்குள் மழைநீர் புகுந்துவிடுவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவதால், மேற்படி பகுதியில் கொட்டப்பட்டு முதல் வெங்கடேஸ்வரா நகர் வரை புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்ட வேண்டியது அவசியமாகிறது.

எனவே இப்பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணியினை மேற்கொள்வதற்கு ரூ.92.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மாமன்றத்தின் பார்வைக்கும் நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.92.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. 2022–2023ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டத்தில் மழைநீர் வடிகால் புதிதாக கட்டுதல்/மேம்படுத்துதல் மற்றும் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் என்ற தலைப்பின் (4103101–1) கீழ் இப்பணிக்கான நிதியினை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி வழங்கலாம்.

**இ3/4827/2022(மையம்)**

தீர்மானம்: 72 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள்:4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, இரண்டாவது வார்டு குழு அலுவலகம் புதிய வார்டு எண்.47 (பழைய வார்டு எண்.35)க்குட்பட்ட கொட்டப்பட்டு வெங்கடேஸ்வரா நகர் முதல் ஐஸ்வரியா கால்வாய் வரை மழைநீர் வடிகால் இல்லாததால், மழைக்காலங்களில் மழைநீர் செல்லவழியின்றி ஜே.கே நகர் பகுதி குடியிருப்பு பகுதிக்குள் மழைநீர் புகுந்துவிடுவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாவதால், மேற்படி பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்ட வேண்டியது அவசியமாகிறது.

எனவே இப்பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணியினை மேற்கொள்வதற்கு ரூ.91.30 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மாமன்றத்தின் பார்வைக்கும் நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.91.30 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. 2022-2023ம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் மழைநீர் வடிகால் புதிதாக கட்டுதல்/மேம்படுத்துதல் மற்றும் நடைபாதையுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் என்ற தலைப்பின் (4103101-1) கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூ.100.00 லட்சத்திலிருந்து இப்பணிக்கான நிதியினை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி வழங்கலாம்.

**இ3/4828/2022(மையம்)**

தீர்மானம்: 73 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள்: 5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டல அலுவலகம் எண்.3க்குட்பட்ட வார்டு எண்.44 மற்றும் 45 ஆகிய பகுதிகளில் அம்ரூத் புதைவடிகால் அமைக்கும் திட்டத்தின் கீழ் மெயின் குழாய்கள் மற்றும் Manhole அமைக்கும் பணியானது நடைபெற்று வருகிறது.
இப்பகுதிகளில் 1986ம் ஆண்டு கல்கண்டார் கோட்டை ஊராட்சி காலத்தில் அமைக்கப்பட்ட 3"PVC மெயின் குழாய்கள் மூலமே தற்போது வரை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இக்குடிநீர் குழாய்கள் சாலையின் நடுவில் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது புதிய புதைவடிகால் பணிகள் நடைபெறும் போது பல இடங்களில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பாதிப்படைந்து பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் பாதிப்பு ஏற்படுகிறது.

மேலும் குடிநீர் மெயின் பகிர்மான குழாய் சாலையின் நடுவே செல்வதால் புதைவடிகால் மெயின் பைப்புகள் Manhole அமைப்பதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது.

எனவே, பொது மக்களின் அன்றாட குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், புதைவடிகால் திட்ட பணிகள் தடையின்றி செயல்படுத்திடவும் மேற்கண்ட பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக மெயின் குழாய்களை மாற்றி அமைத்திடவும், வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகளை வழங்கிடவும் மதிப்பீடு ரூ.32.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:**

1. மதிப்பீடு தொகை ரூ.32.50இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2022-2023ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் தலைமை நீர்ப்பணி / மேல்நிலை நீர்தேக்க தொட்டி / குடிநீர் பகிர்மான குழாய் புணரமைத்தல் மற்றும் குடிநீர் பணிகள் (4103201) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ .100.00 இலட்சத்திலிருந்து இப்பணிக்கான நிதியை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ4/7716 /2022(மையம்)**

தீர்மானம்: 74 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள்:6**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ அபிஷேகபுரம் கோட்டத்திற்குப்பட்ட, பழைய வார்டு எண்.40 (புதியது எண்.57ல்) எடமலைப்பட்டி புதூர், மாநகராட்சிப் பள்ளி வளாகத்தில் உயர்நிலைப்பள்ளி மற்றும் தொடக்கப்பள்ளிகள் செயல்பட்டு வருகிறது. தற்போது உயர்நிலைப்பள்ளியில் 618 மாணவர்களும், தொடக்கப்பள்ளியில் 816 மாணவர்களும் மொத்தம் 1434 மாணாக்கர்கள் பயின்று வருகிறார்கள்.

மேலும் இப்பள்ளிகளில் போதுமான வகுப்பறைகள் இல்லாத காரணத்தினால் தொடக்கப்பள்ளியில் பயின்று வரும் குழந்தைகள் நடை தளத்தில் (வரண்டாவில்) அமர்ந்து பயின்று வருகிறார்கள். எனவே இப்பள்ளியில் பயின்று வரும் மாணவ மாணவியர் நலன் கருதி கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டுவதற்கு மதிப்பீடு ரூ.76.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.76.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
3. 2022-2023 ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் கல்வி நிதி - பள்ளிக் கட்டிடங்கள் புதிதாக கட்டுதல் / மேம்படுத்துதல் (4102001) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ .700.00 லட்சத்திலிருந்து இப்பணிக்கான நிதியினை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ8/ 6759 /2022(மையம்)**

தீர்மானம்: 75 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள்:7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கட்டுப்பாட்டில் கம்பரசம்பேட்டையில் அமைந்துள்ள தலைமை நீர்ப்பணி நிலையம், 1895 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு, தற்போது வரை இயக்கத்தில் இருந்து வருகிறது. இந்நீர்ப்பணி நிலையம் மூலமாகவும், டர்பைன் நீர்ப்பணி நிலையம் மூலமாகவும் சராசரியாக 14.00 மற்றும் 12.00 மில்லியன் லிட்டர் குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்நீர்ப்பணி நிலையத்தில் குடிநீரை உந்துவதற்காக நீர் உந்து குழாய்கள், நீர்சேகரிக்கும் தொட்டிகள், மின்மோட்டார் பம்பு செட்டுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. காலத்திற்கேற்ப மக்கள் தொகை பெருக்கத்தினை கருத்தில் கொண்டும், அவ்வப்போது குடிநீர் அபிவிருத்தி திட்டங்களின் மூலம் மோட்டார்கள், நீர்மூழ்கி மின்மோட்டார்கள், ஸ்டாட்டர்கள், மின்மாற்றிகள் மற்றும் மின்சார பேனல்கள் மாற்றப்பட்டு குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஆழ்துளை கிணறுகளில் இருந்து குடிநீரை சேகரிக்கும் பழைய உந்து குழாய்கள் இதுவரை மாற்றப்படவில்லை. இக்குழாய்கள் நீண்டகால பயன்பாட்டின் காரணமாக பழுதுற்றும், இதன் உள் அளவுகள் குறைந்துள்ளதால், நீர் உந்து திறன் குறைந்து தேவையான குடிநீரை பெற இயலவில்லை. மேலும் தற்போது சீர்மிகு நகரம் - குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் ஒரு பகுதியாக தலைமை நீர்ப்பணி நிலைய வளாகத்தில் புதிதாக 20.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட உயர்நிலை நீர்தேக்க தொட்டி (Master Balancing Service Reservoir) அமைக்கப்படவுள்ளது. இதை அமைக்கும் இடத்தில் மேற்கூறிய உந்து குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளதால் புதிய உயர்நிலை நீர்தேக்க தொட்டி அமைப்பதற்கு இடைஞ்சலாக உள்ளது.

எனவே மேற்கூறிய உயர்நிலை நீர்தேக்க தொட்டி அமைப்பதற்கு இடைஞ்சலாக உள்ள பழைய நீர் உந்து குழாய்களுக்கு பதிலாக புதிதாக MS பைப்புகளை கொண்டு வேறு தடத்தில் நீர் உந்து குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது. எனவே பொதுமக்களுக்கு வழங்கிடும் குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியை மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலையை கொண்டும், உள்ளூர் விலைப்புள்ளிகளை கொண்டும் மதிப்பீடு ரூ.95.75 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மதிப்பீடு தொகை ரூ.95.75 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
3. 2022-2023ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம் தலைமை நீர்ப்பணி / மேல்நிலை நீர்தேக்க தொட்டி / குடிநீர் பகிர்மான குழாய் புணரமைத்தல் மற் றும் குடிநீர் பணிகள் (4103201) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து இப்பணிக்கான நிதியை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்
4. இப்பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணியை மேற்கொள்ளலாம்.

**இ4/ 7758 / 2022 (மையம்)**

தீர்மானம்: 76 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள்:8**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி - 15வது நிதி குழு 2020-21ம் ஆண்டு பரிந்துரை நிதியின் கீழ், திடக்கழிவு மேலாண்மை மேம்படுத்துதல் தலைப்பில் Skid Steer Loader வாகனம் 3 எண்ணிக்கைகள் வாங்கிக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.21191/2021/அம்ருட்-2 நாள்:28.12.2021ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இரண்டாம் முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:307/2021-22, வ.எண்-2, நாள்:12.04.2022ன் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 3 நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளனர். இதில் ஒரு நிறுவனம் தொழில்நுட்ப தகுதி பெறவில்லை. தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ள 2 நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி விவரம் பின்வருமாறு பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of work | Qty | Estimate Amount | | M/s. Jayaraj Automobile Agency, Trichy | | M/s. JCB India Limited, Chennai | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Rate | Amount | Rate | Amount | Rate | Amount |
| 1 | Skid Steer Loader வாகனம் 3 எண்ணிக்கைகள் வழங்கும் பணி | 3 Nos | 2500000 | 7500000 | 2480000 | 7440000 | 2535000 | 7605000 |
| | **Total** | | | **7500000** | | **7440000 (-0.80%) less** | | **7605000 (+1.40%) more** |
| | EMD Rs.1,50,000/- | | | | Axis Bank Demand Draft No.132976 Date.09.02.2022 Amount Rs.70,000/- & State bank of India Demand Draft No. 449431 Date.11.04.2022 Amount Rs.80,000/- | | Axis Bank Demand Draft No.132977 Date.09.02.2022 Amount Rs.70,000/- & State bank of India Demand Draft No. 449432 Date.11.04.2022 Amount Rs.80,000/- | |

மேற்கண்ட விவரப்படி M/s. Jayaraj Automobile Agency, Trichy நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டு விலையை விட -0.80% குறைவாக உள்ளது என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலனை செய்து பரிந்துரைத்ததை ஏற்று மேற்படி பணியானது 15வது நிதி குழு 2020-21 நிதியில் மேற்கொள்ளும் பணி என்பதால் உடன் பணிமேற்கொண்டு பணப்பயன்பாடு சான்று சமர்ப்பித்து 2021-2022ம் ஆண்டிற்கான நிதி பெற வேண்டி உள்ளதால் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர்அவர்களின் முன் அனுமதியுடன் மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகப் குறிப்பு:</u>**

1. ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின்படி மதிப்பீட்டை காட்டிலும் −0.80% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. Jayaraj Automobile Agency, Trichy நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியை (ரூ.74,40,000/−தொகையில் மேற்கொள்ள மாண்புமிகு மேயர்அவர்களின் முன் அனுமதியுடன் மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கிட அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினை 15வது நிதி குழு 2020−21ம் ஆண்டு பரிந்துரை நிதியின் கீழ், திடக்கழிவு மேலாண்மை மேம்படுத்துதல் தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2100.00 லட்சத்திலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**<u>இ5/8639/2021(மையம்)</u>**

தீர்மானம்: 77 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் : 9**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி − 15வது நிதி குழு 2021−22ம் ஆண்டு பரிந்துரை நிதியின் கீழ், காற்றின் தரம் மேம்படுத்துதல் தலைப்பில் சாலை ஓரங்களில் குவிந்துள்ள உபரி மண் மற்றும் C&D waste கழிவுகளைஅப்புறப்படுத்துவதற்கு JCB (Bachhoe Loader Vehicle) − 2 எண்ணிக்கைகள் வாங்கிக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.21191/2021/அம்ருட்−2 நாள்:18.03.2022ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:12/2022−23 வ.எண்:1 நாள்:18.05.2022ன் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 2 நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார்கள் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ள 2 நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of work | Qty | Estimate Amount | | M/s. Raam Baag Equipment & Services (P) Ltd.,Trichy | | M/s.Vetri Construction Equipments Company, Madurai | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Rate | Amount | Rate | Amount | Rate | Amount |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி − 15வது நிதி குழு 2021−22ம் ஆண்டு பரிந்துரை நிதியின் கீழ், சாலை ஓரங்களில் குவிந்துள்ள உபரி மண் மற்றும் C&D waste கழிவுகளைஅப்புறப்படுத்துவதற்கு JCB (Bachhoe Loader Vehicle) − 2 எண்ணிக்கைகள் வழங்கும் பணி | 2 Nos | 3925000 | 7850000 | 3920000 | 7840000 | 3990000 | 7980000 |
| | **Total** | | | **7850000** | | **7840000 (−0.13%) less** | | **7980000 (+1.66%) more** |
| | EMD Rs. 80,000/− | | | | State Bank of India Demand Draft No.365451 Date.17.05.2022 Amount Rs.80,000/− | | State Bank of India Demand Draft No.365450 Date.17.05.2022 Amount Rs.80,000/− | |

மேற்கண்ட பணிக்கு, M/s. Raam Baag Equipment & Services (P) Ltd.,Trichy நிறுவனம், மதிப்பீட்டை காட்டிலும் −0.13% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின்படி ஏற்றும், மேற்படி பணியானது 15வது நிதி குழு 2021−22ம் ஆண்டு நிதியில் மேற்கொள்ளும் பணி என்பதால் உடன் பணி மேற்கொண்டு பணப்பயன்பாடு சான்று சமர்ப்பித்து 2022−23ம் ஆண்டிற்கான நிதி பெற வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி உத்திரவு வழங்குவதற்கு மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகப் குறிப்பு:**

1. ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின்படி மதிப்பீட்டை காட்டிலும் – 0.13% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. Raam Baag Equipment & Services (P) Ltd.,Trichy நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியை ரூ.7840000/–ல் மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி உத்திரவு வழங்கியதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினை 15வது நிதி குழு 2021–22ம் ஆண்டு பரிந்துரை நிதியின் கீழ், காற்றின் தரம் மேம்படுத்துதல் தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.1100.00 லட்சத்திலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ5/4520/2022(மையம்)**

தீர்மானம்: 78 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் :10**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மை – Swachh Bharat Mission (Urban) 2.0ன், 2021–22ம் ஆண்டு நிதியில் 30.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகளில் சேகரமாகும் மண் துகள்களை அகற்றி தன்னுள் சேகரித்துக்கொள்ளும் வசதி உடைய (0.54–0.64 க.மீ கொள்ளளவு) சிறிய ரக சாலை சுத்தம் செய்யும் வாகனம் (Mechanized Road Sweeping Machine – Small) 1 எண்ணிக்கை திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண்.No.5989/SBM/2022, நாள்.09.05.2022ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறையில் மேற்படி வாகனத்தின் தொகை ரூ.30.00 இலட்சத்திற்கான நிதி பங்களிப்பு கீழ்கண்டுள்ள விபரப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

Rs. In Lakhs

| No of road Sweeping machine | Project cost (Rs.30.00 Lakhs. Per machine including GST) | Funding Pattern (GOI : State share) | GOI Share | State Share | ULB Share |
|---|---|---|---|---|---|
| 1 | 30.00 | 33% : 22% | 9.90 | 6.60 | 13.50 |

மேற்கண்ட விபரப்படியான நிதி பங்களிப்பின் படி மத்திய அரசு ரூ.9.90 இலட்சம், மாநில அரசு ரூ.6.60 இலட்சம், மாநகராட்சி பொது நிதி ரூ.13.50 இலட்சம் ஆக மொத்தம் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் சிறிய ரக சாலை சுத்தம் செய்யும் வாகனம் (Mechanized Road Sweeping machine – Small)–1 எண்ணிக்கை வாங்கிக் கொள்ள மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

சிறிய ரக சாலை சுத்தம் செய்யும் வாகனம் (Mechanized Road Sweeping machine – Small)– 1 எண்ணிக்கை ரூ.30.00 இலட்சத்தில் Swachh Bharat Mission (Urban) 2.0ன், 2021–22ம் ஆண்டு நிதி பங்களிப்பின் படி மத்திய அரசு ரூ.9.90 இலட்சம், மாநில அரசு ரூ.9.90 இலட்சம், மாநகராட்சி பொது நிதி ரூ.13.50 இலட்சம் ஆக மொத்தம் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கிட அனுமதிக்கலாம்.

**இ5/6984/2022(மையம்)**

தீர்மானம்: 79 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள்:11**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மை – மாநகராட்சிக்கு சொந்தமான பல்வேறு பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரும் இலகுரக மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு தேவைப்படும் 227 ஓட்டுநர்களை (மனித ஆற்றல்) வழங்கும் பணிக்கு, நாள் ஒன்றிற்கு ஓட்டுநர் ஒருவருக்கு ரூ.563/– என்ற விலை விகிதத்தில் மெசர்ஸ்.AMK Man Power Services, திருச்சி நிறுவனத்தாருக்கு, இவ்வலுவலக உத்திரவு கடிதம் ந.க.எண்.இ5/8181/2021(மையம்) நாள்:28.02.2022ன் படி பணி உத்திரவு வழங்கப்பட்டது. இப்பணியானது எதிர்வரும் 31.03.2022ந் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திலிருந்து மாநகராட்சி பணிகளுக்குத் தேவையான பணியாளர்களின் எண்ணிக்கையை இறுதி செய்து வெளிக்கொணர்வு மூலம் ஒப்பந்ததாரர்களை அமர்த்துவதற்கு பொது வழிமுறைகள் மற்றும் பணியாளர்களை எண்ணிக்கையை இறுதி செய்து உத்திரவு ஏதும் வரப்பெறவில்லை. இப்பணிக்கு புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள கால அவகாசம் இல்லை என்பதாலும், நிர்வாக நலன் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி 01.06.2022 முதல் 31.07.2022 வரை மேலும் 2 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யலாம்.

இந்நிலையில், அனுமதி அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்த விலை விகிதத்திலேயே, தொடர்ந்து ஓட்டுநர்களை வழங்குவதற்கு மெசர்ஸ்.AMK Manpower Services,திருச்சி நிறுவனத்தார் தமது சம்மதத்தை 11.02.2022ந் தேதிய கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளனர். எனவே, 01.06.2022 முதல் 31.07.2022 வரை 2 மாத காலத்திற்கு தற்பொழுது வழங்கி வரும் விலை விகிதத்திலேயே ஓட்டுநர்கள் வழங்கிட இசைவு கடிதம் வழங்கியுள்ளதின் அடிப்படையில் மாநகராட்சி வாகனங்களை தொடர்ந்து இயக்கும் பணியினை கீழ்கண்டுள்ளவாறு மதிப்பீட்டுத் தொகையில் மேற்கொள்ளலாம்.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ஸ்ரீரங்கம் கோட்டம் – 27 எண்ணிக்கை ஓட்டுநர்கள் இ5/407/2020(மையம்) | 927261.00 |
| 2. | அரியமங்கலம் கோட்டம் –40 எண்ணிக்கை ஓட்டுநர்கள் இ5/406/2020(மையம்) | 1373720.00 |
| 3. | பொன்மலை கோட்டம் –42 எண்ணிக்கை ஓட்டுநர்கள் இ5/405/2020(மையம்) | 1442406.00 |
| 4, | கோ.அபிசேகபுரம் கோட்டம் – 46 எண்ணிக்கை ஓட்டுநர்கள் இ5/404/2020(மையம்) | 1579778.00 |
| 5. | மைய அலுவலகம் – 45 எண்ணிக்கை ஓட்டுநர்கள் இ5/403/2020(மையம்) | 1545435.00 |
| 6. | மைய அலுவலகம் – 27 எண்ணிக்கை ஓட்டுநர்கள் இ5/785/2020(மையம்) | 927261.00 |
| **மொத்தம்** | | **7795861.00** |

மேற்கண்ட பணியின் அத்தியாவசியத்தைக் கருதி 01.06.2022 முதல் 31.07.2022 வரை 2 மாத காலத்திற்கு மாநகராட்சி வாகனங்களை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர்களை வழங்கும் பணியினை மெசர்ஸ்.AMK Man power Services, திருச்சி நிறுவனத்தார் மூலம், ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ள விலை விகிதத்தின் படி நாள் ஒன்றிக்கு ஓட்டுநர் ஒருவருக்கு ரூ.563/– என்ற விலை விகித அடிப்படையில் கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள அனுமதி வேண்டி மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மாநகராட்சி வாகனங்களை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் 227 ஓட்டுநர்களை வழங்கும் பணியினை மெசர்ஸ்.AMK Man Power Services, திருச்சி நிறுவனத்தார் மூலம் நாள் ஒன்றிற்கு ஓட்டுநர் ஒருவருக்கு ரூ.563/– என்ற ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகித அடிப்படையில் 01.06.2022 முதல் 31.07.2022 வரை 2 மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தை 2022–23ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டமதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**<u>இ5/8181/2021(மையம்)</u>**

தீர்மானம்: 80 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

## பொருள்:12

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு எண்.V, வார்டு எண்.26க்குட்பட்ட (பழைய வார்டு எண்.52) பகுதிகளில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.51/2022–23ன் வாயிலாக 31.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரபெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்க்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்.26க்குட்பட்ட வண்ணாரப்பேட்டை வாய்காலில் (கீழ வண்ணாரப்பேட்டை நான்கு கால் முதல் பாரதிதாசன் நகர் மெயின் ரோடு வரை) மழைநீர் வடிகால் கட்டும் பணி.<br>**இ2/10460/ 2021( மை)**<br>**மதிப்பீடு ரூ.71.10 இலட்சம்** | 1. **மெசர்ஸ்.நாச்சியார் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி.**<br>**0.05% குறைவு**<br><br>2. திரு.ஜி.வெங்கடேஷ், திருச்சி.<br>**1.90% கூடுதல்** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். நாச்சியார் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி,** நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.05%** சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | வார்டு எண்.26க்குட்பட்ட பாரதிதாசன் தெரு மற்றும் பாரதிநகர் 14வது குறுக்கு தெரு (பாரதிதாசன் நகர் மெயின் ரோடு முதல் கத்திரிக்காய் வாய்கால் வரை) பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டும் பணி.<br>**இ2/10459/ 2021(மை)**<br>**மதிப்பீடுரூ.59.80 இலட்சம்** | 1. **மெசர்ஸ்.கவினி இன்ப்ரா ஸ்டெக்சர்ஸ் & டெவலப்பர்ஸ், திருச்சி.**<br>**0.05% குறைவு**<br><br>2. திரு.ஆர்.ராஜ்குமார், திருச்சி.<br>**1.80% கூடுதல்** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். கவினி இன்ப்ரா ஸ்டெக்சர்ஸ் & டெவலப்பர்ஸ், திருச்சி,** நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.05%** சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு.**

மேற்கண்ட அட்டவணையில் உள்ள பணிகளுக்கு பத்தி எண்.4ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரப்படியான மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
**(இ2/ 10460/2021 (மை))**

தீர்மானம்: 81 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

## பொருள்:13

மாநகராட்சி பணிவிதிகள் 1996ல் துப்புரவு மேற்பார்வையாளர் (Conservancy Supervisor) பணியிடத்திற்கு கீழ்கண்டவாறு பணி நியமன முறை நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

| பதவியின் பெயர் | பணிநியமன முறை |
|---|---|
| Conservancy Supervisor | By Transfer from the holder of the post of categories (1) and (2) of Group V of this Service<br>**Categories**<br>1. Record Assistant<br>2. Head Office Assistant |

அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.08.05.1998ல் பல்வேறு நிலையிலான பணியிடங்களுக்கு பணியிட அளவுகோல் நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, துப்புரவு மேற்பார்வையாளர் (Conservancy Supervisor) பணியிடத்திற்கு கீழ்கண்டவாறு பணியிட அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எ ண் | பணியிடத்தின் பெயர் | அரசாணை நிலை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25.07.1997 ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் | தற்போது அரசால் முடிவாக ஏற்படுத்தி மற்றும் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றை நிரப்புதல் குறித்த விவரங்கள் மற்றும் ஆணைகள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | துப்புரவு மேற்பார்வையாளர் | நிர்ணயிக்கப்படவில்லை | தற்போது உள்ள 61 பணியிடங்கள் தொடர அனுமதிக்கப்படுகிறது. மாநகராட்சியில் உள்ள துப்புரவு பணி மற்றும் துப்புரவு பணியாளர்கள் முதலியவற்றின் அடிப்படையில் பணியிடங்களை நிர்ணயம் செய்ய தகுந்த கருத்துருக்களை உடனடியாக அரசிற்கு அனுப்ப மாநகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார். |

மேற்கண்ட அரசாணையில் 61 பணியிடங்களை தொடர அனுமதிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13639 / 2012 / மா.நஅ1, நாள்.04.04.2012ல் துப்புரவு மேற்பார்வையாளர் நிலையில் 105 பணியிடங்கள் இம்மாநகராட்சிக்கு அளவு கோல் நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணை எண்.520, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.10.10.2013ல் துப்புரவு மேற்பார்வையாளர் (Conservancy Supervisor) நிலையில் 70 பணியிடங்கள் மட்டுமே அனுமதித்தும், பணிவிதிகளின்படி பூர்த்தி செய்து கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது.

பணி விதிகளின்படி இப்பணியிடங்களை பதிவுரு எழுத்தர் நிலையில், பணியாற்றி வரும் பணியாளர்களை துப்புரவு மேற்பார்வையாளர் (Conservancy Supervisor) நிலையிலான பணியிடத்திற்கு பணிமாறுதல் அடிப்படையில் பணியமர்த்துதல் வேண்டும்.

பதிவுரு எழுத்தர் நிலையில், பணிபுரிந்து வரும் பணியாளர்களில் ஒரு சிலர் தவிர இதர பணியாளர்கள் துப்புரவு மேற்பார்வையாளர் (Conservancy Supervisor) பணியிடத்தில் பணிபுரிய விருப்பம் தெரிவிக்கின்றனர். இதர பணியாளர்கள் பதிவுரு எழுத்தர் நிலையிலேயே பணிபுரிய விரும்புகின்றனர்.

அதன்படி, தற்பொழுது துப்புரவு மேற்பார்வையாளர் (Conservancy Supervisor) பணியிடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட 70 பணியிடங்களில் 55 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இதனை தொடர்ந்து, துப்புரவு மேற்பார்வையாளர் (Conservancy Supervisor) பணியிடத்திற்கான பணிவிதிகள் கீழ்கண்டவாறு திருத்தம் செய்து தர ஏற்கனவே இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.5541/ 2011/ சி1(மையம்) வாயிலாக அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

| Sl.No. | Name of the post | Method and Qualification |
|---|---|---|
| 1. | Conservancy Supervisor | 1. By Transfer from the holders of the post of Record Assistant and Head Office Assistant in categories 1 and 2 of Group V of this Service.<br>**Amendments suggested**<br>By Transfer from the holders of the post of Record Assistant and Head Office Assistant in categories 1 and 2 of Group V of the Tamilnadu Municipal Corporation General Subordinate Service rules 1996.<br>**By Direct Recruitment**<br>(The Qualification prescribed for the post of Junior Assistant Cum Typist may be Continued and the ratio between Direct Recruitment and by transfer of service shall be fixed at the ratio of 2:1 respectively)<br>(i) By Promotion according to seniority from the holders of the posts coming under last grade service who have passed Xth standard (SSLC New pattern) examination and served for a period of not less than five years in the basic service. |

துப்புரவு மேற்பார்வையாளர் (Conservancy Supervisor) பணியிடத்திற்கு திருத்தங்கள் செய்து தர கோரியதனை தொடர்ந்து, உரிய ஆணை பிறப்பிக்கப்படாமல் இருந்து வருகிறது.

இந்நிலையில், இம்மாநகராட்சிக்குட்பபட்ட பகுதிகளில் தூய்மை பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ளுவதற்கு இப்பணியிடம் அவசியம் என்பதாலும், பதிவுரு எழுத்தர் நிலையில் பணிபுரியும் பணியாளர்கள் பணிமாறுதல் அடிப்படையில், இப்பணியிடத்திற்கு பணிபுரிய விருப்பம் இல்லாததாலும், துப்புரவு மேற்பார்வையாளர் (Conservancy Supervisor) பணியிடத்தினை நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்து கொள்ள ஏதுவாக கீழ்கண்டவாறு பணிவிதிகளுக்கு திருத்தங்கள் வெளியிட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்பி வைப்பது குறித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| Sl.No. | Name of the post | Method and Qualification |
|---|---|---|
| 1. | Conservancy Supervisor | <u>Amendments suggested</u><br><br>(i) By Promotion according to seniority from the holders of the posts coming under last grade service who have passed Xth standard (SSLC New pattern) examination and served for a period of not less than five years in the basic service.<br><br>(ii) By Direct Recruitment (The Qualification prescribed for the post of Junior Assistant may be Continued and the ratio between Direct Recruitment, by promotion and by transfer of service shall be fixed at the ratio of 2:1 respectively)<br><br>(iii) If qualified hands for promotion are not available then such vacancies shall also be filled up by Direct Recruitment |

**அலுவலக குறிப்பு:–**

ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண். 7405 / 2022 / சி1(மையம்)**

தீர்மானம்: 82 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்:14**

மாநகராட்சி பணிவிதிகள் 1996ல் துப்புரவு ஆய்வாளர் (Conservancy Inspector) பணியிடத்திற்கு கீழ்கண்டவாறு பணிவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பணி நியமன முறையில் நியமனம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

| பதவியின் பெயர் | பணிநியமன முறை |
|---|---|
| Conservancy Inspector | By Transfer from the holder of the post of Junior Assistant Cum Typist |

இதன் தொடர்ச்சியாக, அரசாணை எண். 140, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 27.05.1997, இல் 25 ஆண்டுகள் பணி நிறைவு செய்துள்ள துப்புரவு மேற்பார்வையாளரை துப்புரவு ஆய்வராக (Conservancy Inspector) பதவி உயர்வு செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.08.05.1998ல் பல்வேறு நிலையிலான பணியிடங்களுக்கு பணியிட அளவுகோல் நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி, துப்புரவு ஆய்வாளர் பணியிடத்திற்கு கீழ்கண்டவாறு பணியிட அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எ ண் | பணியிடத்தின் பெயர் | அரசாணை நிலை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25.07.1997 ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் | தற்போது அரசால் முடிவாக ஏற்படுத்தி மற்றும் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றை நிரப்புதல் குறித்த விவரங்கள் மற்றும் ஆணைகள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | துப்புரவு ஆய்வாளர் | 60 (அறுபது) | அறுபது பணியிடங்கள் அனுமதிக்கப்படுகிறது. திருச்சி மாநகராட்சியில் மிகுதியாக உள்ள இளநிலை உதவியாளர் (32) வரிவசூலிப்பவர் (11) அவர்கள் விருப்பத்தின் படி துப்புரவு ஆய்வாளர்களாக நியமிக்கலாம். மிகுதியாக உள்ள எட்டு பதிவுறு எழுத்தர்களை அவர்கள் தகுதிப் பெற்றிருப்பின் பதவி உயர்வு மூலம் நியமிக்கலாம். மீதமுள்ள உள்ள ஒன்பது பதவிகளை நேரடி நியமனம் மூலம் நிரப்ப ஆணையாளர் அரசை அணுக வேண்டும். |

மேற்கண்ட 60 பணியிடங்கள் பல்வேறு காரணங்களால் பூர்த்தி செய்ய இயலாத பணியிடங்களை பூர்த்தி செய்து கொள்ள அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டதனை தொடர்ந்து, அரசாணை எண். 520, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 10.10.2013இல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 60 பணியிடங்களுக்கு பதிலாக 35 துப்புரவு ஆய்வாளர் பணியிடங்கள் மட்டுமே அனுமதித்தும், பணிவிதிகளின்படி பூர்த்தி செய்து கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது.

துப்புரவு ஆய்வாளர் (Conservancy Inspector) பணியிடத்திற்கு பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் நிலையில் பணிபுரிந்து வருபவர்கள் மட்டுமே பூர்த்தி செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டிருந்தது.

பணி விதிகள் 1996ல் குறிப்பிட்டுள்ள இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் பணியிடத்திற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட அரசாணை எண்.87, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.08.2020ல் இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் பணியிடத்தை இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் என இரண்டாக பிரித்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், துப்புரவு ஆய்வாளர் (Conservancy Inspector) பணியிடத்திற்கு கீழ்கண்டவாறு திருத்தங்கள் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

(e) in column (2), for the entry against the corresponding entry "Conservancy Inspector" in column (1), the following entries shall be substituted, namely:-

"(i) by transfer from the holders of the post of Junior Assistant; and
(ii) by transfer from the holders of the post of Typist";

இந்நிலையில், பணிவிதிகளின்படி இப்பணியிடங்களை பூர்த்தி செய்ய ஏதுவாக இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்களில் பணியாற்றி வரும் பணியாளர்கள் பணிமாறுதல் அடிப்படையில் துப்புரவு ஆய்வாளர் (Conservancy Inspector) ஆக பணிபுரிய விரும்பாததால், இப்பணியிடங்கள் பூர்த்தி செய்ய இயலாத நிலை ஏற்பட்டு வருகிறது.

தற்பொழுது துப்புரவு ஆய்வாளர் (Conservancy Inspector) பணியிடத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட 35 பணியிடத்தில் 1 பணியாளர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்.

இப்பணியிடத்திற்கான பணிவிதிகளுக்கு கீழ்கண்டவாறு திருத்தங்கள் செய்து தர ஏற்கனவே, இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.8479 / 2011 / சி1 (மையம்), நாள்.13.07.2012ன் வாயிலாக அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

| Sl. No. | Name of the post | Method and Qualification |
|---|---|---|
| 1. | Conservancy Inspector | 1. By Transfer from the holders of the post of Junior Assistant cum typist.<br>2. By Promotion from the holders of the post of Sanitary Supervisor who completed 25 years of service (GO.No.140, MA&WS, Dept Dated.27.05.1997.<br><br>**Amendments suggested**<br>1. By Transfer from the holders of the post of Junior Assistant cum typist.<br>2. By Promotion from the holders of the post of Conservancy Supervisor who have completed 25 years of service and those who have been possessed qualification 10th Passed (or) equivalent Qualification.<br>3. By Direct Recruitment<br>(The Qualification for the post of Conservancy Inspector may be fixed as +2 Pass . The ratio between transfer of service, promotion and direct recruitment shall be fixed at 1:1:1 respectively. |

துப்புரவு ஆய்வாளர் (Conservancy Inspector) பணியிடத்திற்கு திருத்தங்கள் செய்து தர கோரியதனை தொடர்ந்து, உரிய ஆணை பிறப்பிக்கப்படாமல் இருந்து வருகிறது.

இந்நிலையில், இம்மாநகராட்சிக்குட்பபட்ட பகுதிகளில் தூய்மை பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ளுவதற்கு இப்பணியிடம் அவசியம் என்பதாலும், இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்களில் பணிபுரிந்து வருபவர்கள் துப்புரவு ஆய்வாளர் (Conservancy Inspector) பணியிடத்திற்கு பணிமாறுதலில் செல்ல விரும்பாததாலும், இப்பணியிடத்தினை நேரடி நியமனம் மூலம் பூர்த்தி செய்து கொள்ள ஏதுவாக கீழ்கண்டவாறு பணிவிதிகளுக்கு திருத்தங்கள் வெளியிட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் வழியாக அரசுக்கு அனுப்பி வைப்பது குறித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of the post | Method and Qualification |
|---|---|---|
| 1. | Conservancy Inspector | **Amendments suggested**<br>1. By Promotion from the holders of the post of Conservancy Supervisor who have completed 25 years of service and those who have been possessed qualification 10th Passed (or) equivalent Qualification.<br>2. By Direct Recruitment<br>(The Qualification for the post of Conservancy Inspector may be fixed as 10th Pass. The ratio between promotion and direct recruitment shall be fixed at 1:1 respectively.<br>3. If qualified hands for promotion are not available then such vacancies shall also be filled up by Direct Recruitment |

**அலுவலக குறிப்பு:-**

ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண். 7404 / 2022 / சி1(மையம்)**

தீர்மானம்: 83 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்:15**

ஸ்ரீரங்கம், பொன்மலை மற்றும் கோ–அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணிகளை மெசர்ஸ்.Glind Tech Consultants. தஞ்சாவூர் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டதற்கு பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு மேற்படி ஒப்பந்தக்காரர் கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்கம் எண் மற்றும் வரிசை எண். | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | தொகுப்பு | ப.எண். | வ.எண் |
| 1 | ஸ்ரீரங்கம் ரங்கா ரங்கா கோபுரம் அருகில் RO plant with UV disinfect வசதியுடன் அமைத்தல் மதிப்பீடு ரூ.6.95 லட்சம் இ3/10887/2014(மையம்) | 06.12.14<br>Plus & Plus<br>09.07.15<br>(SD) 3% | 7000.00<br>7000.00<br>20786.00 | VII<br>VII<br>VIII | 41<br>41<br>20 | 562<br>561<br>18 |
| 2 | ஸ்ரீரங்கம் ராகவேந்திரா வளைவு எதிர்புறம் RO plant with UV disinfect வசதியுடன் அமைத்தல் மதிப்பீடு ரூ.6.95 லட்சம் இ3/10886/2014(மையம்) | 06.12.14<br>Plus & Plus<br>09.07.15<br>(SD) 3% | 7000.00<br>7000.00<br>20786.00 | VII<br>VII<br>VIII | 41<br>41<br>20 | 563<br>564<br>19 |
| 3 | அம்மாமண்டபம் அருகில் RO plant with UV disinfect வசதியுடன் அமைத்தல் மதிப்பீடு ரூ.6.95 லட்சம் இ3/10884/2014(மையம்) | 06.12.14<br>Plus & Plus<br>09.07.15<br>(SD) 3% | 7000.00<br>7000.00<br>20786.00 | VII<br>VII<br>VIII | 41<br>41<br>20 | 565<br>566<br>20 |
| 4 | வார்டு எண்.10க்குட்பட்ட சத்திரம் பேருந்து நிலையத்தில் RO plant with UV disinfect வசதியுடன் அமைத்தல்மதிப்பீடு ரூ.6.95 லட்சம் இ3/10885/2014(மையம்) | 06.12.14<br>Plus & Plus<br>17.02.16<br>(SD) 4% | 7000.00<br>7000.00<br>27714.00 | VII<br>VII<br>VIII | 41<br>41<br>61 | 568<br>567<br>47 |
| 5 | மத்திய பேருந்து நிலையத்தில் குரு ஹோட்டல் எதிர்புறம் RO plant with UV disinfect வசதியுடன் அமைத்தல்மதிப்பீடு ரூ.6.95 லட்சம் இ3/10883/2014(மையம்) | 06.12.14<br>Plus & Plus<br>17.02.16<br>(SD) 4% | 7000.00<br>7000.00<br>27714.00 | VII<br>VII<br>VIII | 42<br>42<br>61 | 576<br>577<br>48 |
| 6 | வார்டு எண்.13 மலைக்கோட்டை வாசல் பகுதியில் RO plant with UV disinfect வசதியுடன் அமைத்தல் மதிப்பீடு ரூ.6.95 லட்சம், இ3/680/2016(மையம்) | 18.01.16<br>02.09.16<br>(SD) 4%<br>FD | 7000.00<br>27755.00<br><br>7000.00 | VIII<br>IX<br><br>VIII | 57<br>23<br><br>63 | 70<br>299<br><br>83 |
| 7 | வார்டு எண்.60 வெக்காளியம்மன் கோவில் அருகில் RO plant with UV disinfect வசதியுடன் அமைத்தல் மதிப்பீடு ரூ.6.95 லட்சம், இ3/679/2016(மையம்) | 18.01.16<br>02.09.16<br>(SD) 4%<br>FD | 7000.00<br>2775.5.00<br><br>7000.00 | VIII<br>IX<br><br>VIII | 63<br>24<br><br>63 | 82<br>300<br><br>76 |
| 8 | மேற்கண்ட அனைத்து பணிகளுக்கு கூடுதல் வைப்புத் தொகை (Sl. No. 1 to 5) | 18.12.14 | 35000.00 | VII | 41 | 50 |
| | மொத்தம் | EMD<br>EMD<br>Plus & Plus<br>SD 3%<br>SD 4% | 49000.00<br>49000.00<br>35000.00<br>62358.00<br>110938.00<br>306296.00 | | | |

எனவே, பட்டியலில் கண்டுள்ளவாறு இப்பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.1,73,296/- மற்றும் வைப்புத் தொகை ரூ.98,000/-ஐயும் காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.Glind Tech Consultants. தஞ்சாவூர் நிறுவனத்திற்கும், மேற்கண்ட அட்டவணையில் வ.எண்.1 முதல் 5 வரையிலான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மெசர்ஸ்.பிளஸ் அன் பிளஸ், பாண்டிச்சேரி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படாததால், இந்த நிறுவனம் செலுத்திய வைப்புத் தொகைகள் ரூ.35,000/-ஐ (5 பணிகள்) திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதிக்குப் மாமன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மெசர்ஸ்.Glind Tech Consultants. தஞ்சாவூர் நிறுவனத்திடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ .1,73,296/- மற்றும் வைப்புத் தொகை ரூ .98,000/-ஐயும் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account ) இந்நிறுவனத்திற்கு திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.
2. அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு மெசர்ஸ்.பிளஸ் அன் பிளஸ், பாண்டிச்சேரி நிறுவனம் வழங்கிய ஒப்பந்தப்புள்ளி தொகை ஏற்றுக் கொள்ளப்படாததால் , இந்த நிறுவனம் இப்பணிகளுக்கு செலுத்திய வைப்புத் தொகை ரூ.35,000/-ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account ) இந்நிறுவனத்திற்கு திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ3/ 93 /2021(மையம்)**

தீர்மானம்: 84 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்:16**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு எண் 1, வார்டு எண். 01க்குட்பட்ட ஆண்டவர் ஆசிரமம் முதல் நீர்சேகரிப்பு கிணறு வரை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் புதிதாக தார் சாலை அமைக்கும் பணியினை மேற்கொள்வற்கு மதிப்பீடு ரூ.57.50 இலட்சத்திற்கு தயார் செய்து, இப்பணியினை பொதுநிதி 2021-22ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 61/2021-22ன் வாயிலாக 20.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், திரு. P.V. சந்திரன் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு 04.08.2021 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

இப்பணியினை துவக்கும் போது, பொதுப்பணித்துறை மூலம் உள்ளூர் திட்ட குழுமம் நிதியில் கொள்ளிடக்கரை வண்ணத்துப்பூச்சி பூங்கா முதல் திருவானைக்கோயில் செக்போஸ்ட் வரை சாலையினை அகலப்படுத்தி புதிதாக தார் சாலை அமைக்க மதிப்பீடு ரூ.3.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை நிலை எண். 92 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (நி.வ,4(2)த் துறை நாள். 05.07.2021ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, இப்பணியானது பொதுப்பணித்துறை மூலம் துவங்கும் நிலையில் உள்ளதால், மாநகராட்சி மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள மதிப்பீடு ரூ.57.50 இலட்சத்திற்கான பணியினை ரத்து செய்ய மாமன்றத்தின்அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. பணியினை ரத்து செய்ய மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்
2. ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள பிணை வைப்புத்தொகையினை திரும்ப வழங்க அனுமதி அளிக்கலாம்.

**இ7/4781/2021(மையம்)**

தீர்மானம்: 85 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் :17**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதியின் கீழ், ஒப்பந்தப்பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.மேற்படி பணிக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே, மேற்படி பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி திரு.S.குருசாமி, ஒப்பந்ததாரர் திருச்சி அவர்கள் கோரியுள்ளார்

திரு.S.குருசாமி திருச்சி ஒப்பந்ததாரர் செலுத்திய முன் வைப்புத் தொகை ரூ. 15809/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

மேலும், ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் ( Lapsed Deposit Account) பத்தி எண். 6ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விவரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | பிடித்தம் செய்யப்பட்டுள்ள நாள் | தொகை ரூபாயில் | காலங்கடந்த நிலுவைத் வைப்புத் தொகை (2021-22) பதிவேட்டின் பக்கம் எண். & வரிகை எண். |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | வார்டு எண்.40க்குட்பட்ட கொல்லாங்குளம் ஸ்டாலின் பகுதியில் அமைந்துள்ள கழிப்பிடத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணி மதிப்பீடு ரூ.3.20 இலட்சம் | திரு.S.குருசாமி | 28.01.2019 காப்புத் தொகை | 12609.00 | பகுதி - XI பக்கம் எண். 67 வ.எண் - 1177 (மைய அலுவலகம்) |
| | | | 1 % EMD , Indian bank, DD No. 541112 Dt. 30/08/2018 | 3200/- | பகுதி - XI பக்கம் எண். 30 வ.எண் - 525 (மைய அலுவலகம்) |
| | | மொத்தம் | | 15809.00 | |

மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரருக்கு தணிக்கையில் " எவ்வித தணிக்கை தடையும் இல்லை " எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், பத்தி எண்.6ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகைகளை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**.

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) ஒப்பந்ததாரர் திரு. S.குருசாமி திருச்சி அவர்களுக்கு ரூ.15809/-யை திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ7/7164/2022 (மையம்)**

தீர்மானம்: 86 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்:18**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம், வார்டு எண்.07 & 29க்குட்பட்ட கீழ்கண்ட பணியை திரு.சி.சுப்பிரமணியன், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணியினை மேற்கொண்டமைக்கு **தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை**.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூ) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண்& வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | தொகுப்பு | ப. எண் | வ. எண் |
| 1 | வார்டு எண்.7க்குட்பட்ட பொன்மணி நகர் மற்றும் வார்டு எண்.29க்குட்ப்பட்ட ஜஸ்வரியா கார்டன் மற்றும் கொங்கு நகர் ஆகிய மனைப் பிரிவுகளில் உள்ள பூங்கா ஒதுக்கீடு இடங்களில் முள்வேளி அமைக்கும் பணி. **இ2/9625/2018(மை) மதிப்பீடு ரூ.9.80 இலட்சம்** | திரு.சி.சுப்பிரமணியன், திருச்சி | 15.12.19 | 34,430 (4%) | – | - | – |
| | | | EMD 08.01.19 | 8.800 | XI | 61 | 1069 |
| **மொத்தம்** | | | | **43,230** | | | |

ஒப்பந்ததாரர் திரு.சி.சுப்பிரமணியன், திருச்சி அவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை மற்றும் வைப்புத் தொகை ரூ.43,230/–ஐ, காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**:

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை **ரூ.43,230/–ஐ** காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து(Lapsed Deposite Account) திரும்ப வழங்கவும் ஒப்புதல் அளிக்கலாம்.

**இ2/ 5668/2021(மையம்)**

தீர்மானம்: 87 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்: 19**

இம்மாநகராட்சியில் பல்வேறு பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு தொடர்ந்து பயன்படுத்த இயலாத நிலையில் கழிவு செய்வதற்கு நிறுத்தப்பட்ட கீழ்கண்ட வாகனங்களுக்கு இயக்குநர், மோட்டர் வாகனப் பராமரிப்புத் துறை, வேளச்சேரி, சென்னை அவர்களின் கடிதம் எண்:H1/16148/2021, நாள்:30.12.2021. (Normal condemnation) மற்றும் இயக்குநர், மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, வேளச்சேரி, சென்னை அவர்களின் கடிதம் எண்: H1/16486/2021, நாள்:10.01.2022. (Premature Condemnation)ன் படி இன்றைய மதிப்பினை நிர்ணயம் செய்து கழிவாணையினை வழங்கியுள்ளார்கள்.

அதன் அடிப்படையில் அவ்வாகனங்களை முதல் முறையாக 06.04.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளியுடன் கூடிய பொது ஏல விற்பனை நடத்தியதில், அன்றைய தினம் பொது ஏல விற்பனையில் ஒப்பந்தப்புள்ளி யாரும் சமர்பிக்கவில்லை மற்றும் 98 நபர்கள் கலந்து கொண்டதில் கோரப்பட்ட ஏல உச்ச கேள்வி தொகைகள் விபரம் கீழே பார்வைக்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | வாகனப் பதிவு எண் மற்றும் இதர விவரங்கள் | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை இயக்குநரால் நிர்ணயிக்கப்பட்ட தொகை (ரூபாய்) | உச்சக் கேள்வி தொகை கோரிய ஏலதாரர் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பெயர் மற்றும் முகவரி | தொகை (ரூபாய்) | செலுத்திய தொகை (ரூபாய்) | இரசீது எண் மற்றும் நாள் | வல்லுநர் குழுவின் மதிப்பைக் காட்டிலும் கூடுதல் தொகை (ரூபாய்) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1. | TN 45 AS 3855 | 113000 | M/s.C.N.G. Traders,58,M.K. Street, Palakarai, Trichy–8 | 130000 | 100000 | எண்.86/A1/1/22–23/0000126 நாள்:06.04.2022,(D.D) | 17000 |
| | | | | | 100000 | எண்.86/A1/1/22–23/0000127 நாள்:06.04.2022,(D.D) | |
| 2. | TN 45 AH 0617 | 111000 | | 155000 | 100000 | எண்.86/A1/1/22–23/0000128 நாள்:06.04.2022,(D.D) | 44000 |
| | | | | | 50000 | எண்.86/A1/1/22–23/0000129 நாள்:06.04.2022,(D.D) | |
| 3. | TN 45 AP 3885 | 46000 | | 72000 | 7000 | எண்.86/A1/1/22–23/0000130 நாள்:06.04.2022,(ரொக்கம்) | 26000 |
| கூடுதல் | | 270000 | | 357000 | 357000 | | 87000 |
| 4. | TN 45 AR 3061 | 99000 | M/s.Muthugani Rowther Traders 57/1,Kajapet Main Road, Trichy–1 | 130000 | 130000 | எண்.86/A1/1/22–23/0000102 நாள்:06.04.2022,(ரொக்கம்) | 31000 |
| 5. | TN 45 H 1753 | 102000 | M/s.Bothra Traders, 10th Street Jothi Nagar, Thiruvottiyur, Tiruvallur–19 | 263000 | 263000 | எண்.86/A1/1/22–23/0000103 நாள்:06.04.2022,(ரொக்கம்) | 161000 |
| 6. | TN 45 AP 3867 | 48000 | M/s.Thenral Traders 57/1,Puthu Street, Kajapet, Thiruchi–1 | 71000 | 50000 | எண்.86/A1/1/22–23/0000134 நாள்:06.04.2022,(DD) | 23000 |
| | | | | | 50000 | எண்.86/A1/1/22–23/0000135 நாள்:06.04.2022,(DD) | |
| 7. | TN 45 AP 3911 | 46000 | | 70000 | 41000 | எண்.86/A1/1/22–23/0000136 நாள்:06.04.2022,(ரொக்கம்) | 24000 |
| கூடுதல் | | 94000 | | 141000 | 141000 | | 47000 |
| 8. | TN 45 AM 8526 | 105000 | M/s.S.K.M.Traders,41A,Ground Floor, Pudhu Street, Kajapettai,Trichy–1 | 150000 | 100000 | எண்.86/A1/1/22–23/0000104 நாள்:06.04.2022,(DD) | 45000 |
| | | | | | 50000 | எண்.86/A1/1/22–23/0000105 நாள்:06.04.2022,(ரொக்கம்) | |
| கூடுதல் | | 105000 | | 150000 | 150000 | | 45000 |

| வ. எண் | வாகனப் பதிவு எண் மற்றும் இதர விவரங்கள் | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை இயக்குநரால் நிர்ணயிக்கப்பட்ட தொகை (ரூபாய்) | உச்சக் கேள்வி தொகை கோரிய ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | தொகை (ரூபாய்) | செலுத்திய தொகை (ரூபாய்) | இரசீது எண் மற்றும் நாள் | வல்லுநர் குழுவின் மதிப்பைக் காட்டிலும் கூடுதல் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9. | TN 45 AP 2134 | 45000 | M/s.M.N.STraders, 36/B2 Anjuman Bazaar, Quaidemillath Sallai Palakarai, Trichy-8 | 70000 | 25000 | எண்.86/A1/1/22-23/0000114 நாள்:06.04.2022,(DD) | 25000 |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000115 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000116 நாள்:06.04.2022,(DD) | |
| 10. | TN 45 AP 3862 | 46000 | | 72000 | 25000 | எண்.86/A1/1/22-23/0000117 நாள்:06.04.2022,(DD) | 26000 |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000118 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000119 நாள்:06.04.2022,(DD) | |
| 11. | TN 45 AP 3901 | 48000 | | 70000 | 25000 | எண்.86/A1/1/22-23/0000120 நாள்:06.04.2022,(DD) | 22000 |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000121 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000122 நாள்:06.04.2022,(DD) | |
| 12. | TN 45 AP 3915 | 46000 | | 70000 | 25000 | எண்.86/A1/1/22-23/0000123 நாள்:06.04.2022,(DD) | 24000 |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000124 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 7000 | எண்.86/A1/1/22-23/0000125 நாள்:06.04.2022,(ரொக்கம்) | |
| கூடுதல் | | 185000 | | 282000 | 282000 | | 97000 |
| 13. | TN 45 AS 3847 | 105000 | M/s.Classic Steel,150,NA,Tirumagal Bye Pass Kandampatty,Salem-5 | 150000 | 50000 | எண்.86/A1/1/22-23/0000096 நாள்:06.04.2022,(DD) | 45000 |
| | | | | | 50000 | எண்.86/A1/1/22-23/0000097 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 50000 | எண்.86/A1/1/22-23/0000098 நாள்:06.04.2022,(DD) | |
| கூடுதல் | | 105000 | | 150000 | 150000 | | 45000 |
| 14. | TN 45 AM 8520 | 113000 | M/s.BEST Motors, 5,Jail Street, Madurai Road, Palakkarai, Trichy-8 | 141000 | 50000 | எண்.86/A1/1/22-23/0000099 நாள்:06.04.2022,(DD) | 28000 |
| | | | | | 50000 | எண்.86/A1/1/22-23/0000100 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 41000 | எண்.86/A1/1/22-23/0000101 நாள்:06.04.2022,(ரொக்கம்) | |
| | கூடுதல் | 113000 | | 141000 | 141000 | | 28000 |
| 15. | TN 45 L 6862 | 55000 | M/s.Ibrahim Steels Corporation,43,Alwarthoppu,Near O Palam,Trichi-8 | 185000 | 25000 | எண்.86/A1/1/22-23/0000106 நாள்:06.04.2022,(DD) | 130000 |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000107 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000108 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000109 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000110 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000111 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000112 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 10000 | எண்.86/A1/1/22-23/0000113 நாள்:06.04.2022,(ரொக்கம்) | |
| கூடுதல் | | 55000 | | 185000 | 185000 | | 130000 |

| வ. எண் | வாகனப் பதிவு எண் மற்றும் இதர விவரங்கள் | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை இயக்குநரால் நிர்ணயிக்கப் பட்ட தொகை (ரூபாய்) | உச்சக் கேள்வி தொகை கோரிய ஏலதாரர் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பெயர் மற்றும் முகவரி | தொகை (ரூபாய்) | செலுத்திய தொகை (ரூபாய்) | இரசீது எண் மற்றும் நாள் | வல்லுநர் குழுவின் மதிப்பைக் காட்டிலும் கூடுதல் தொகை (ரூபாய்) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 16. | TN 45 AR 3094 | 114000 | M/s.Ibrahim Steels Corporation,43,Alw arthoppu,Near O Palam,Trichi-8 | 133000 | 25000 | எண்.86/A1/1/22-23/0000087 நாள்:06.04.2022,(DD) | 19000 |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000088 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000089 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000090 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000091 நாள்:06.04.2022,(DD) | |
| 17. | TN 45 AP 2130 | 48000 | | 70000 | 25000 | எண்.86/A1/1/22-23/0000092 நாள்:06.04.2022,(DD) | 22000 |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000093 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000094 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 3000 | எண்.86/A1/1/22-23/0000095 நாள்:06.04.2022,(ரொக்கம்) | |
| கூடுதல் | | 162000 | | 203000 | 203000 | | 41000 |
| 18. | TN 45 AP 3913 | 46000 | M/s.Ibrahim Steels Corporation,43,Alw arthoppu,Near O Palam,Trichi-8 | 70000 | 25000 | எண்.86/A1/1/22-23/0000131 நாள்:06.04.2022,(DD) | 24000 |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000132 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 20000 | எண்.86/A1/1/22-23/0000133 நாள்:06.04.2022, (ரொக்கம்) | |
| கூடுதல் | | 46000 | | 70000 | 70000 | | 24000 |
| 19. | TN 45 AK 1478 | 65000 | I.Mohamed Ibramsha,8, Subjail Road, Palakarai,Trichy-8 | 85000 | 125000 | எண்.86/A1/1/22-23/0000158 நாள்:06.04.2022,(DD) | 20000 |
| 20. | TN 45 AS 3826 | 105000 | | 145000 | 105000 | எண்.86/A1/1/22-23/0000159 நாள்:06.04.2022, (ரொக்கம்) | 40000 |
| கூடுதல் | | 170000 | | 230000 | 230000 | | 60000 |
| 21. | TN 45 AR 3109 | 106000 | R.Velusamy,15, Indra Nagar, Kottapattu, Trichy-4 | 140000 | 25000 | எண்.86/A1/1/22-23/0000137 நாள்:06.04.2022,(DD) | 34000 |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000138 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000139 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000140 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000141 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 15000 | எண்.86/A1/1/22-23/0000142 நாள்:06.04.2022,(ரொக்கம்) | |
| கூடுதல் | | 106000 | | 140000 | 140000 | | 34000 |
| 22. | TN 45 AP 8688 | 110000 | M/s.Manjakudi Traders 59/2,MK Street, Palakarai, Trichy-8 | 135000 | 150000 | எண்.86/A1/1/22-23/0000146 நாள்:06.04.2022,(DD) | 25000 |
| | | | | | 25000 | எண்.86/A1/1/22-23/0000147 நாள்:06.04.2022,(DD) | |
| 23 | TN 45 AP 2189 | 45000 | | 71000 | 25000 | எண்.86/A1/1/22-23/0000148 நாள்:06.04.2022,(DD) | 26000 |
| | | | | | 6000 | எண்.86/A1/1/22-23/0000149 நாள்:06.04.2022,(ரொக்கம்) | |
| கூடுதல் | | 155000 | | 206000 | 206000 | | 51000 |

| வ. எண் | வாகனப் பதிவு எண் மற்றும் இதர விவரங்கள் | மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை இயக்குநரால் நிர்ணயிக்கப் பட்ட தொகை (ரூபாய்) | உச்சக் கேள்வி தொகை கோரிய ஏலதாரர் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | பெயர் மற்றும் முகவரி | தொகை (ரூபாய்) | செலுத்திய தொகை (ரூபாய்) | இரசீது எண் மற்றும் நாள் | வல்லுநர் குழுவின் மதிப்பைக் காட்டிலும் கூடுதல் தொகை (ரூபாய்) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 24. | TN 45 AS 3849 | 105000 | M/s.Easwari Metal,2, Thambu Complex,28, Thanjavur road ,Trichy–8 | 145000 | 50000 | எண்.86/A1/1/22–23/0000156 நாள்:06.04.2022,(DD) | 40000 |
| | | | | | 95000 | எண்.86/A1/1/22–23/0000157 நாள்:06.04.2022,(ரொக்கம்) | |
| கூடுதல் | | 105000 | | 145000 | 145000 | | 40000 |
| 25. | TN 45 T 4909 | 97000 | M/s.Jeyaraj & Co.218/247, Chinnasami Nagar, Tennur,Trichy–17 | 257000 | 50000 | எண்.86/A1/1/22–23/0000150 நாள்:06.04.2022,(DD) | 160000 |
| | | | | | 50000 | எண்.86/A1/1/22–23/0000151 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 50000 | எண்.86/A1/1/22–23/0000152 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 50000 | எண்.86/A1/1/22–23/0000153 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 50000 | எண்.86/A1/1/22–23/0000154 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 7000 | எண்.86/A1/1/22–23/0000155 நாள்:06.04.2022, (ரொக்கம்) | |
| கூடுதல் | | 97000 | | 257000 | 257000 | | 160000 |
| 26. | TN 45 T 4911 | 95000 | M/s.Vijayasundari Traders,10, Indira Nagar, Edamalaipattipudur, Tiruchi–12 | 113000 | 50000 | எண்.86/A1/1/22–23/0000143 நாள்:06.04.2022,(DD) | 18000 |
| | | | | | 50000 | எண்.86/A1/1/22–23/0000144 நாள்:06.04.2022,(DD) | |
| | | | | | 13000 | எண்.86/A1/1/22–23/0000145 நாள்:06.04.2022,(ரொக்கம்) | |
| கூடுதல் | | 95000 | | 113000 | 113000 | | 18000 |
| ஆக கூடுதல் | | 2064000 | | 3163000 | 3163000 | | 1099000 |

மேற்படி அட்டவணை வரிசை எண்.1 முதல் 26 வரை குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களுக்கு ஏலதாரரின் உச்ச கேள்வித் தொகைகள் அரசு நிர்ணயித்த தொகையை விட கூடுதலாக இருப்பதால், பத்தி எண் 4ல் குறிப்பிட்டுள்ள நபர்களின் உச்ச கேள்வித் தொகையினை ஊர்ஜிதம் செய்திட மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மேற்படி அட்டவணை வரிசை எண்1 முதல் 26 வரை குறிப்பிட்டுள்ள வாகனங்களுக்கு ஏலதாரரின் உச்ச கேள்வித் தொகைகள் அரசு நிர்ணயித்த தொகையை விட கூடுதலாக இருப்பதால், பத்தி எண் 4ல் குறிப்பிட்டுள்ள நபர்களின் உச்ச கேள்வித் தொகையினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேலும் இவ்வாகனங்களை ஏல உச்ச கேள்விதாரர் வசம் ஒப்படைக்கவும் மேற்படி வாகனங்களை சம்மந்தப்பட்ட இருப்பு பதிவேடுகளில் இருந்து நீக்கம் செய்யவும் ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ5/8764/2020(மையம்)**

**தீர்மானம்: 88 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள்:20**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு எண்.3, வார்டு எண்.35க்குட்பட்ட செந்தண்ணீர்புரம் பகுதியில் தேசிய நகர்புற சுகாதார திட்டத்தின் கீழ், சுகாதார ஆரோக்கிய நல மையம் கட்டும் பணி தொடங்க ஏதுவாக பழைய சேதமடைந்த மருந்தக கட்டிடத்தை அப்புறப்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. மேலும், கீழ்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு பழைய பொருட்கள் இடித்து அப்புறபடுத்தப்படவுள்ளது.

| வ.எண் | பழைய பொருட்களின் விபரம் | எண்ணிக்கை | கூடுதல் விலைப்புள்ளி பெற்றுள்ள விபரம் | கூடுதல் விலை விபரம் |
|---|---|---|---|---|
| 1 | மர ஜன்னல் | 5 | 2400.00 | 12,000/- |
| 2 | இரும்பு கிரீல் கதவு | 1 (40 கிலோ) | 26.00 | 1,040/- |
| 3 | உடைந்த நிலை கதவு | 1 | 2200.00 | 2,200/- |
| 4 | Roof சிலாப் கம்பி | 1 (250 கிலோ) | 26.00 | 6,500/- |
| 5 | கட்டிட இடி பொருட்கள் (கல், மண்) | 2(நடை) | 275.00 | 550/- |
| **மொத்தம்** | | | | **22,290/-** |

எனவே, வார்டு எண்.35க்குட்பட்ட செந்தண்ணீர்புரம் பகுதியில் உள்ள பழைய மருந்தகத்தை அகற்றிடவும் அதில் உள்ள மேற்குறிப்பிட்டுள்ள பழைய பொருட்களை எடுத்துக் கொள்வதற்கு ரூ.22,290/-ஐ பெறுவதற்கு அனுமதி கோரியும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்ற பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை **ரூ.22,290/-க்கு** நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பகுதியில் உள்ள பழைய கட்டித்தினை அகற்றவும், அதிலுள்ள பொருட்களை எடுத்துவிட்டு புதிதாக ஆரோக்கிய நல மையம் கட்டுவதற்கு அனுமதி அளிக்கலாம்

**இ1/2345/2022(தி)**

தீர்மானம்: 89 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்: 21**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழுஅலுவலகம் IV, வார்டு எண்.64 பகுதிக்கு உட்பட்ட கலைஞர் கருணாநிதி நகர் பேருந்து நிலையம் அருகில் 10' X 10' என்ற அளவில் ஆவின் பாலகம் அமைக்க பொது மேலாளர், திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., கொட்டப்பட்டு, திருச்சிராப்பள்ளி - 23 அவர்கள் ந.க.எண்.2745/விற்பனை/2021-2022, நாள்.07.02.2022 கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட இடத்திற்கு 10' X 10' என்ற அளவில் இடம் ஒதுக்கீடு செய்யவும், ஒரு சதுர அடிக்கு ரூ.50/- வீதம் 100 சதுர அடிக்கு 50 X 100 = 5000/- என மாத வாடகை வசூல் செய்யலாம் எனவும் பொறியர் பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மாதவாடகை ரூ.5000/- என நிர்ணயம் செய்து சேவை வரியுடன் சேர்த்து வசூலிக்கவும், அரசாணை எண்.(நிலை) எண்.285, நாள்.29.04.85, அரசாணை நிலை எண்.857 நாள்.21.07.86, அரசாணை எண்.135 நாள்.13.07.94 தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதியுடன் கலைஞர் கருணாநிதி நகர் பேருந்து நிலையம் அருகில், பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 10' X 10' = 100' சதுர அடி அளவில் ஆவின் பாலகம் அமைத்து ஆவின்பால் மற்றும் ஆவின் பால் உபபொருட்கள் வைத்து விற்பனை செய்து கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களது அனுமதி பெறுவதற்காக மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

1. மாதவாடகை ரூ.5000/- என நிர்ணயம் செய்து, சேவைவரியுடன் சேர்த்து வசூலிக்கவும், அரசாணை எண்.(நிலை) எண்.285 நாள் 29.04.85, அரசாணை எண் (நிலை) எண்.857 நாள்.21.07.86, அரசாணை எண்.135 நாள்.13.07.94ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கலாம்.

2. பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கலைஞர் கருணாநிதி நகர் பேருந்து நிலையத்திற்கு அருகில் ஆவின்பாலகம் அமைத்து விற்பனை செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் அனுமதி பெற்று அனுமதி வழங்கலாம்.

**(கோப்பு எண்.அ1/3222 /2022/ம–IV)**

தீர்மானம்: 90 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்:22**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் வீடுவீடாக சென்று சேகரிக்கப்படும் குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என்று தரம் பிரித்து வாங்குவதற்கு, கீழ்கண்ட சுய உதவிக்குழு பணியாளர்களை கொண்டு, மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ.எண் | சுய உதவிக்குழுக்களின் பெயர் | குழுவிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அரங்கர் ஆடவர் | 13 |
| 2 | ஆண்டாள் மகளிர் | 14 |
| 3 | அப்துல் கலாம் | 19 |
| 4 | மாணிக்க விநாயகர் ஆண்கள் | 20 |
| 5 | மலைக்கோட்டை ஆண்கள் | 19 |
| 6 | விவேகம் ஆண்கள் | 16 |
| 7 | விழுதுகள் ஆண்கள் | 17 |
| 8 | விருட்சம் பெண்கள் | 13 |
| | மொத்தம் | 131 |

மேற்சொன்ன பணியாளர்களுக்கு 31.03.2022 வரை ஊதியம் வழங்கப்பட்டு 2021–2022 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அனுமதி முடிவுற்றதால் ஏப்ரல்–2022 முதல் ஜீன் –2022 வரை தொடர்ந்து பணியாளர்களை பணி அமர்த்திக்கொள்ளவும் நாளொன்றுக்கு ரூ.461/– (461X91=ரூ.41,951 X 131 = 54,95,581/–) இதற்கான தொழிலாளர் வருங்கால வைப்புநிதி மற்றும் (EPF) நிர்வாக பங்குதொகை 13% சதவீதம் ரூ.714425/– ESI Contribution 3.25 % ரூ.1,78,606/– ஆக மொத்தம் ரூ.63,88,612 ஆகும்.

**அலுவலகக்குறிப்பு:** திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவுகளை வீடுவீடாக சென்று, குப்பைகளை தரம் பிரித்து வாங்குவதற்காக 131 சுயஉதவிக்குழு தூய்மைப் பணியாளர்கள் தொடர்ந்து பணிபுரியவும் ஏப்ரல் –2022 முதல் ஜீன்–2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு அனுமதி தொகை ரூ.63,88,612/– மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**கோப்பு எண் அ5/1248/2022 (ஸ்ரீ)**

தீர்மானம்: 91 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள் : 23**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் வீடுவீடாக சென்று சேகரிக்கப்படும் குப்பைகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என்று தரம் பிரித்து மக்கும் குப்பைகளை கொண்டு உரமாக்கும் பணி கீழ்கண்ட சுயஉதவிக்குழு பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ.எண் | சுய உதவிக்குழுக்களின் பெயர் | குழுவிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | ஆம்பல் | 13 |
| 2 | அய்யாளம்மன் | 18 |
| 3 | பைரவா | 19 |
| 4 | தீபம் | 15 |
| 5 | கண்ணகி | 19 |
| 6 | ஸ்ரீஅரங்கநாதர் | 20 |
| 7 | ஸ்ரீராகவேந்திரா | 19 |
| 8 | தென்றல் | 20 |
| 9 | தாழம்பூ | 18 |
| | **மொத்தம்** | **161** |

மேற்சொன்ன பணியாளர்களுக்கு 31.03.2022 வரை ஊதியம் வழங்கப்பட்டு, 2021-2022 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அனுமதி முடிவுற்றதால், ஏப்ரல்-2022 முதல் ஜீன்-2022 வரை தொடர்ந்து பணியாளர்களை பணி அமர்த்திக்கொள்ளவும், நாள் ஒன்றுக்கு ரூ.461/- வீதம் (461x91= ரூ.41,951 x 161=ரூ.67,54,111/-) இதற்கான தொழிலாளர் வருங்கால வைப்புநிதி மற்றும் (EPF) நிர்வாக பங்குதொகை 13% சதவீதம் ரூ.8,78,034/- ESI Contribution 3.25 % ரூ.219509/- ஆக மொத்தம் ரூ.78,51,654/-

**அலுவலக குறிப்பு:** நுண்ணுயிர் உரக்கூடம் -திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டத்திற்குட்பட்ட நுண்ணுயிர் உரக்கிடங்கில் பணிபுரியும் 161 சுய உதவிக்குழு பணியாளர்களை தொடர்ந்து பணியமர்த்தி கொள்ளவும், ஏப்ரல்-2022 முதல் ஜீன் -2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு ஊதியம் தொகை வழங்குவதற்கு ரூ.7851654/-ஐ மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**கோப்பு எண்அ5/1249/2022/(ஸ்ரீ)**

தீர்மானம்: 92 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்:24**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ-அபிஷேகபுரம் கோட்டம் - திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினக்கூலி அடிப்படையில் 188 சுய உதவி குழு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு. திடக்கழிவு பணிகள் பாதிப்படையாத வகையில் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட 7 நுண்உர செயலாக்க மையத்தில் குழுக்களில் உள்ள 188 பணியாளர்களை தொடர்ந்து பணியமர்த்தி கொள்வதற்கும் (2022-2023 ) ம் நிதியாண்டில் மூன்று மாதங்களுக்கு அப்பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய செலவினம் (188x461 x 86668x 91 நாட்களுக்கு) = ரூ.78,86,788/- ஆகும். மேலும், கூடுதலாக நிர்வாகத்தின் (Management contribution) 13% ரூ.10,25,282/- மற்றும் ESI பங்குத்தொகை 3.25% ரூ.2,56,321/-ம் ஆக கூடுதல் தொகை ரூ.91,68,391/- ஆகும்.(91 நாட்களில் ஞாயிறு கிழமை உள்பட மற்றும் தொழிலாளர் நல நிதி உள்பட) (01.04.2022 முதல் 30.06.2022 வரை) ஊதியம் வழங்க நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண் | நுண் உர செயலாக்க மையத்தின் பெயர் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | ஊதியம் வழங்க வேண்டிய காலம் | உத்தேச செலவினத் தொகை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 40,41,45 | கருமண்டபம் | 41 | 01.04.2022 30.06.2022 | 41 | x | 461 | x | 18901 | x | 91 | 1719991 |
| 2 | 49,50 | குழுமிக்கரை | 23 | 01.04.2022 30.06.2022 | 23 | x | 461 | x | 10603 | x | 91 | 964873 |
| 3 | 51,54 | கல்லாங்காடு | 21 | 01.04.2022 30.06.2022 | 21 | x | 461 | x | 9681 | x | 91 | 880971 |
| 4 | 52,53 | வயலூர் ரோடு | 30 | 01.04.2022 30.06.2022 | 30 | x | 461 | x | 13830 | x | 91 | 1258530 |
| 5 | 55,56 | வாமடம் | 26 | 01.04.2022 30.06.2022 | 26 | x | 461 | x | 11986 | x | 91 | 1090726 |
| 6 | 57,58 | கோணக்கரை | 24 | 01.04.2022 30.06.2022 | 24 | x | 461 | x | 11064 | x | 91 | 1006824 |
| 7 | 59,60 | பனிக்கன் தெரு | 23 | 01.04.2022 30.06.2022 | 23 | x | 461 | x | 10603 | x | 91 | 964873 |
| மொத்தம் | | | 188 | | 188 | X | 461 | X | 86668 | X | 91 | 7886788 |

**அலுவலகக்குறிப்பு :**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தற்சமயம் நுண் உர செயலாக்க மையத்தில்¦ பணிபுரியும் சுயஉதவிக் குழு பணியாளர்கள் ¦ 188 நபர்களை தொடர்ந்து பணியில் பயன்படுத்தி கொள¦ளவும், 01.04.2022 முதல¦ 30.06.2022வரை சுயஉதவிக்குழு பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய தினக்கூலி உத்தேச செலவினம் ரூ.91,68,391/-க்கு அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.சி1/5234/2021(கோ.அபி)**

தீர்மானம்: 93 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்:25**

தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தீர்மானம் எண்.426, நாள்.02.08.2021.ன்படி திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் சுகாதாரக்கேடு ஏற்படாத வண்ணம் தினசரி திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள சுயஉதவி குழுக்களின் மூலம் பணிபுரியும் 156 துப்மை பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்கப்பட்டது. இந்நிலையில் 2022-2023 நிதியாண்டிற்கு கீழ்காணும் சுயஉதவிக்குழுவில் உள்ள 156 துப்மை பணியாளர்களை 01.04.2022 முதல் 30.06.2022 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து பணிபுரிய அனுமதியும், நாள் ஒன்றுக்கு ரூ.461/- வீதம் (156×461×91) = ரூ.65,44,356/- மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிர்வாக பங்குத்தொகை 13% சதவீதம் ரூ.8,50,766/- மற்றும் ESI பங்குத்தொகை 3.25% சதவீதம் ரூ.2,12,691/-ம் ஆக கூடுதல் தொகை ரூ.76,07,813/-ஐ ஊதிய செலவீனத்திற்கு வழங்க அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | சுயஉதவிக் குழுக்களின¦ பெயர் | துப்புரவு பணியாளர்களின¦ எண்ணிக்கை | ஊதியம் வழங¦க வேண்டிய காலம் |
|---|---|---|---|
| 1 | அலைகள் | 18 | 01.04.22 – 30.06.2022 |
| 2 | அம்பேத்கர் | 18 | 01.04.22 – 30.06.2022 |
| 3 | சுபாஷ் | 16 | 01.04.22 – 30.06.2022 |
| 4 | தில்லை | 15 | 01.04.22 – 30.06.2022 |
| 5 | வெக்காளி | 18 | 01.04.22 – 30.06.2022 |
| 6 | முத்து | 18 | 01.04.22 – 30.06.2022 |
| 7 | தீபம் | 18 | 01.04.22 – 30.06.2022 |
| 8 | காவேரி | 22 | 01.04.22 – 30.06.2022 |
| 9 | தூய்மை | 13 | 01.04.22 – 30.06.2022 |
| கூடுதல் | | 156 | |

**அலுவலக குறிப்பு :** சுயஉதவிகுழுவில் உள்ள துர்ய்மை பணியாளர்கள் 156 நபர்களை தொடர்ந்து தினக்கூலி அடிப்படையில் பணி அமர்த்தவும், 01.04.2022 முதல் 30.06.2022 வரை மூன்று மாதத்திற்கு உத்தேச செலவினம் ரூ.76,07,813/–க்கு கணக்கு தலைப்பு எண் 2101010க்கு கீழ் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். சி3/1187 /2019 (கோ.அபி )**

தீர்மானம்: 94 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்: 26**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சி (மே) வட்டம், கோ.அபிஷேகபுரம் கோட்டம் மற்றும் கிராமம், கருமண்டபம், புல எண் 35/3, புதிய தேர்தல் வார்டு எண் 56, சர்வே வார்டு AC, பிளாக் எண் 16, நகரளவு எண் 3/3 பாகம், 8.30 ஏக்கர் பரப்பளவு கொண்ட "சர்க்கார் புறம்போக்கு" என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு துறைக்கு சொந்தமான, புதுத் தெரு, மாந்தோப்பு மற்றும் தெற்குத் தெரு ஆகிய பகுதிகளில் 60 ஆண்டுகளாக வசித்து வரும் குடியிருப்புதாரர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட ஏதுவாக மாமன்றத் தீர்மானம் இயற்றி, அதன் நகலினை அனுப்பி வைக்குமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.ஆ1/29204/2018, நாள் 07.06.2022ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி இடத்தினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மேற்கொண்ட தலப்பார்வையில், மேற்படி பகுதியில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக, பொதுமக்கள் குடியிருந்து வருகின்றனர் என்பது உறுதி செய்யப்பட்டது.

எனவே, மேற்படி இடத்தில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருவதால் மேற்படி குடியிருப்புதாரர்களுக்கு பட்டா வழங்கிடவும், அவ்விடமானது பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான இடம் என்பதால் மேற்கூறிய 8.30 ஏக்கர் பரப்பளவு இடத்திற்கு மாற்றாக வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடத்தினை வழங்கிடவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மேற்படி இடங்களில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருவதால் மேற்படி குடியிருப்புதாரர்களுக்கு பட்டா வழங்கிடவும், அவ்விடமானது பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான இடம் என்பதால் மேற்கூறிய 8.30 ஏக்கர் பரப்பளவு இடத்திற்கு மாற்றாக வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடத்தினை வழங்கிடவும் மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி அவர்களுக்குக் கடிதம் அனுப்பி வைப்பதற்கு ஒப்புதல் வழங்கலாம்.

**(எப்1/8050/2022/மையம்)**

தீர்மானம்: 95 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்:27**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விடுப்பட்ட பகுதிகள் மற்றும் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தும் நோக்கில் அம்ரூத் திட்டத்தின் கீழ், 2020ஆம் ஆண்டை அடிப்படையாக கொண்டு, ரூ.344.00கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு ஆணை எண்.111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC2) நாள். 25.10.2017 ல் ஒப்புதல் அளித்துள்ளதின் பேரில், மேற்படி திட்ட பணியினை 3 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. நிர்வாக காரணங்களால் திருத்திய மதிப்பீடு ரூ.377.29 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, அரசு ஆணை எண். 43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) நாள். 28.02.2019ல் திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளவாறு நிதி ஆதாரத்தின் படி, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை கழகம் (TNUIFSL ) மூலமாக ஆசிய வளர்ச்சி வங்கி (ADB)நிதியுதவியின் கீழ், பாதாள சாக்கடை திட்டத்திற்கான மான்யம் ரூ.55.54 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேற்படி நிதி பெறுவதற்கு தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண். 163 நாள். 08.03.2019ம் நாளைய தீர்மானத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், இத்திட்டத்தில் மான்யம் பெறுவதற்குரிய ஒப்பந்தகாலம் 31.05.2022ம் நாளுடன் முடிவடைந்துள்ளதால், தற்போது 68.66 % பணிகள் மட்டுமே நிறைவடைந்துள்ளமையால், ரூ.36.00 கோடி மான்யமாக பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.19.54 கோடி மான்யத் தொகையினை பெறுவதற்கு ஏதுவாக 31.12.2023ம் தேதி முடிய காலநீட்டிப்பு செய்வதற்கு TNUFISL. சென்னை 31.05.2022ம் மின்னஞ்சல் வாயிலாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி PSGF ல் மான்யம் ரூ.19.54 கோடி பெறுவதற்கு TNUIFSL நிறுவனத்துடன் ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்ததை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. Deputy Manager , TNUIFSL. Chennai அவர்களின் 31.05.2022ம் நாளைய மின்னஞ்சல் கடிதத்தில் தெரிவித்தள்ளவாறு மான்யம் பெறுவதற்கு 31.12.2023ம் கால நீட்டிப்பு செய்ய அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி திட்டம் மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்படவிருக்கும் அனைத்து ஒப்பந்தப் பத்திரத்திலும் மாநகராட்சி ஆணையர் ஒப்பம் செய்வதற்கான முழு உரிமை வழங்கிட மாமன்ற அனுமதி வழங்கலாம்.
4. மாண்புமிகு மேயர் அவர்களது முன் அனுமதிபெற்று TNUIFSL நிறுவனத்துடனான ஒப்பந்த காலத்தை 31.12.2023 வரை நீட்டிப்பு செய்வதை பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ7/ 1228/2015(மையம்)**

தீர்மானம்: 96 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்:28**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விடுப்பட்ட பகுதிகள் மற்றும் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தும் நோக்கில் அம்ரூத் திட்டத்தின் கீழ், 2020ஆம் ஆண்டை அடிப்படையாக கொண்டு, ரூ.344.00கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசு ஆணை எண்.111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC2) நாள். 25.10.2017 ல் ஒப்புதல் அளித்துள்ளதின் பேரில், மேற்படி திட்ட பணியினை 3 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. நிர்வாக காரணங்களால் திருத்திய மதிப்பீடு ரூ.377.29 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, அரசு ஆணை எண். 43 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) நாள். 28.02.2019ல் திருத்திய நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளவாறு நிதி ஆதாரத்தின் படி, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை கழகம் (TNUIFSL ) மூலமாக ஆசிய வளர்ச்சி வங்கி (ADB)நிதியுதவியின் கீழ், பாதாள சாக்கடை திட்டத்திற்கான கடன் ரூ.37.84 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேற்படி நிதி பெறுவதற்கு தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண். 162 நான். 08.03.2019ம் நாளைய தீர்மானத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், இத்திட்டத்தில் மான்யம் பெறுவதற்குரிய ஒப்பந்தகாலம் 31.05.2022ம் நாளுடன் முடிவடைந்துள்ளதால், தற்போது 68.66 % பணிகள் மட்டுமே நிறைவடைந்துள்ளமையால், ரூ.24.00 கோடி கடனாக பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.13.84 கோடி கடன் தொகையினை பெறுவதற்கு ஏதுவாக 31.12.2023ம் தேதி முடிய காலநீட்டிப்பு செய்வதற்கு TNUFISL. சென்னை 31.05.2022ம் மின்னஞ்சல் வாயிலாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி ADB ல் கடன் ரூ.13.84 கோடி பெறுவதற்கு TNUIFSL நிறுவனத்துடன் ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்ததை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. Deputy Manager, TNUIFSL. Chennai அவர்களின் 31.05.2022ம் நாளைய மின்னஞ்சல் கடிதத்தில் தெரிவித்தள்ளவாறு கடன் பெறுவதற்கு 31.12.2023ம் கால நீட்டிப்பு செய்ய அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி திட்டம் மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்படவிருக்கும் அனைத்து ஒப்பந்தப் பத்திரத்திலும் மாநகராட்சி ஆணையர் ஒப்பம் செய்வதற்கான முழு உரிமை வழங்கிட மாமன்ற அனுமதி வழங்கலாம்.
4. மாண்புமிகு மேயர் அவர்களது முன் அனுமதிபெற்று TNUIFSL நிறுவனத்துடனான ஒப்பந்த காலத்தை 31.12,2023 வரை நீட்டிப்பு செய்வதை பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ7/ 1228/2015(மையம்)**

தீர்மானம்: 97 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்: 29**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ அபிஷேகபுரம் கோட்டம், (பழைய வார்டு எண்.52) புதிய வார்டு எண். 26க்குப்பட்ட புத்தூர் E.V.R ரோட்டிலுள்ள வண்ணாரப்பேட்டை மாநகராட்சி துவக்கப்பள்ளியில் பயின்று வரும் பள்ளி மாணவ மாணவியர் நலன் கருதி நவீன முறையில் கணினி மூலம் கல்வி பள்ளி மாணவ மாணவியர்கள் கல்வி தரத்தினை உயர்த்திட ஏதுவாகும் பொருட்டு சீர்மிகு வகுப்பறை அமைக்கும் பணியினை மேற்கொள்ளவதற்கு மதிப்பீடு ரூ.33.55 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்கண்ட மதிப் பீட்டுத் தொகை ரூ .33.55 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
3. 2022–2023 ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் கல்வி நிதி – பள்ளிக் கட்டிடங்கள் புதிதாக கட்டுதல் / மேம்படுத்துதல் (4102001) என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ .700.00 லட்சத்திலிருந்து இப்பணிக்கான நிதியினை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ8/ 3076 /2022(மையம்)**

தீர்மானம்: 98 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்: 30**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு எண்.01 மேலரண் சாலையில் உள்ள இரத்தினவேல் தேவர்மன்ற வணிக வளாக தரைக் கீழ் தளம் கட்டடக்கடை எண்.11(177 சதுரடி)க்கு 26.05.2022ந் தேதியன்று பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளி கோரும் இனத்தில் இருவர் மட்டும் கலந்துக் கொண்டு பின்வரும் விவரப்படி கேள்வித் தொகை கொடுத்துள்ளனர்.

| வ. எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம் | உயர்ந்தபட்ச ஏலக் கேள்வித் தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விவரம் | ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | - | - | திருமதி. எஸ்.முத்துலெட்சுமி<br>SF 201,சுவர்ணாமேனா,<br>34/36D. சந்திரா நகர்,<br>ஸ்ரீரங்கம்,திருச்சி 6 | 12,750/- |
| 2 | - | - | திரு.ஏ. செல்வராஜ்,<br>21, பர்மா பஜார்,<br>தெப்பக்குளம் அஞ்சல்<br>திருச்சி | 12,600/- |

மேற்படி கடைக்கு மாநகராட்சி நிர்ணயம் செய்த மாத வாடகை தொகை ரூ.12567/-ஐ விட திருமதி.எஸ். முத்துலெட்சுமி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.12,750/- கூடுதலாக உள்ளது. எனவே, திருமதி. எஸ். முத்துலெட்சுமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.12,750/-ஐ ஏற்க மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ). திருமதி எஸ். முத்துலெட்சுமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.12,750/-(ஒரு மாதவாடகை)யினை ஏற்கலாம்.

ஆ). அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி4) நாள்.03.07.2007ன் படி ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்கி ஒப்படைப்பு செய்யலாம்.

இ). 12 மாத வாடகை தொகை ரூ.1,53,000/-னை முன் பணமாக செலுத்தப்பட்டும் மற்றும் ரூபாய் 100 மதிப்புள்ள ஒப்பதப் பத்திரம் எழுதி கொடுக்கப்பட்ட பின்னர் அதிகபட்ச மேற்படி கடைக்கான உரிமம் வழங்கி கடையினை ஒப்படைப்பு செய்யலாம்.

**கோப்பு எண். ந.க.எண்.அ1/1504/21/ம1**

தீர்மானம்: 99 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

**பொருள்:31**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொது நிதி 2022–2023ன் கீழ் , பொது சுகாதார பணிக்கு தேவையான கிருமி நாசினி பிளீச்சிங் பவுடர் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 03/2022–2023 வாயிலாக 31.05.2022 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலித்து பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டு விலையை விட) | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொது சுகாதார பணிக்கு தேவையான பிளீச்சிங் பவுடர் கொள்முதல் செய்தல் (மதிப்பீட்டு தொகை ரூ.9.40 இலட்சம்) | 1.M/S.Green Tech,6/201, Near Thenmariamman Kovil,G.K.Karatur, Ammanikondalam patti, Nattamangalam, Salem.<br><br>2,M/sMahil Traders, 10, 1st Floor, Venkatachalanaidu Street, Keelasanthaipettai, Madurai. | –0.43 % (குறைவு)<br><br>+2.94% (அதிகம்) | M/S.Green Tech, சேலம் நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் –0.43 % குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு**

1. M/S.Green Tech, சேலம் நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
2. ஒப்புதலை எதிர்நோக்கி அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி பெற்று M/S.Green Tech, சேலம் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

**[எச்4/6631/2022 (மையம்)]**

தீர்மானம்: 100 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது

பொருள்:32

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொது நிதி 2022–2023ன் கீழ் , பொது சுகாதார பணிக்கு தேவையான கிருமி நாசினி நீர்த்த சுண்ணாம்பு கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 02/2022–2023 வாயிலாக 31.05.2022 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலித்து பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டு விலையை விட) | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | **திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொது சுகாதார பணிக்கு தேவையான நீர்த்த சுண்ணாம்பு கொள்முதல் செய்தல் (மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சம்)** | 1.M/S.Green Tech,6/201, Near Thenmariamman Kovil,G.K.Karatur, Ammanikondalam patti, Nattamangalam, Salem.<br><br>2,M/sMahil Traders, 10, 1st Floor, Venkatachalanaidu Street, Keelasanthaipettai, Madurai. | 2.63 % (குறைவு)<br><br>3.89% (அதிகம்) | M/S.Green Tech, **சேலம் நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 2.63 % சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.** |

**அலுவலகக் குறிப்பு**

**1.** M/S.Green Tech, சேலம் நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**2.**ஒப்புதலை எதிர்நோக்கி அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் அனுமதி பெற்று M/S.Green Tech, சேலம் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

[எச்4/6630/2022 (மையம்)]

**தீர்மானம்: 101 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

பொருள்:33

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு எண்.5, வார்டு எண்.09க்குட்பட்ட (பழைய வார்டு எண்.59) உறையூர் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி தேசிய நகர்புற சுகாதார திட்டம் 2018–19ம் ஆண்டின் கீழ் கட்டப்பட்டு வருகிறது. மேலும் உறையூர் சுகாதார நிலையத்திற்கு கூடுதலாக தரை ஓடுகள், சுவர் ஓடுகள், Weathering Coarse, Pressed tiles, மின்வசதி மற்றும் தண்ணீர் வசதி போன்ற அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மேற்கொள்வது மிகவும் அவசியமாகிறது.

